கொள்ளலாம். மேலும் 6 மாதங்கள் என்கிறபோது அக்டோபர், மார்ச் ஆகிய இரண்டு மாதங்களுக்கும் விலக்களிக்கப்பட்டு அந்தக் காலங்களில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்தும் இருக்கிறது.

செஞ்சியிலுள்ள அரசு மருத்துவ மனை

*5 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசினர் மருத்துவ மனையில் ஒரு கண்நோய் சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: செஞ்சி மலைப் பகுதியாக இருப்பதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அதிகமாக கண் நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அப்போது கடலூர், விழுப்புரம் போன்ற பகுதிகளுக்கு அவர்கள் சிகிச்சைக்காகச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இதனை உத்தேசித்தாவது இந்த முடிவை மறுபரிசீலனை செய்து அங்கே ஒரு கண் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவத்துறையில் உள்ள சிறப்பு மிக்க ஸ்பெஷலிஸ்டுகளைப் போட்டு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினர் மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பார்த்து எந்த எந்த தாலுக்கா மருத்துவ மனைகளில் எந்த எந்தப் பிரிவு மருத்துவத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாக அறிக்கை தர இருக்கிறார்கள். அவர்களது அறிக்கையில் இந்தப் பகுதியில் கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டால் அதை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன: தலைமை மருத்துவ மனைகளில் ஸ்பெஷலிஸ்டுகள் என்பதாக—அதுவும் சிறப்புத் துறையில் தலைசிறந்த நிபுணர்களாகக் கருதப்படுகிறவர்களே இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

*6 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசாங்க மருத்துவ மனையில் ரத்த பரிசோதனை நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.